1978 ஏப்ரல் 7]

தீண்டாமை ஒழிப்பு

*. வினா 839— திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப்படுத்தும் வகையில் எல்லா மாவட்டங்களிலும் அதற்கென ஒரு தனிக் காவல்படை (Spec al Police Squad) அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப்படுத்தும் பொருட்டு, ரோந்து காவல்படை (Mobile Police Squad) கோயம்புத்தூர், மதுரை, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் தற்போது உள்ளது. பிற மாவட்டங்களிலும் இது போன்ற ரோந்து காவல்படை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வ. மு, சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த ரோந்துபடை உடனடியாக அமைக்கப்படுமா ? அடுத்து, அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் தீண்டாமைப் புகார்களை அவர்களே தற்போது நேரடியாகக் கொடுக்க இயலாமல் இருப்பதாலும், மற்றும் சாட்சிகள் தயாரிக்க முடியாமல் இருப்பதாலும், மற்ற வழக்குகளைப் போல் இந்த தீண்டாமை ஒழிக்கும் ரோந்துப் படையே அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று, அதைத் தடுக்க ஆவன செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே அந்த ரோந்துப் படையிடம் புகார் தரப்பட்டு அதற்கு அப்புரம் விசாரிக்கப்பட்டு, இறுதியாகத்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய பலன் கிடைக்க வழி இருக்கிறது.

[முற்பகல் 9-40]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, இந்தச் சட்ட மன்றத்தில் தீண்டாமைப் பற்றிப் பல நேரங்களில் உறுப்பினர்கள் மனம் நொந்து பேசியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டமான ஒரு நிலைமை இருக்கும்போது 10 ஆண்டுகளுக்கு முன்னாலே அவர்கள்செய்யக்கூடிய தொழிலை எங்கள் ஊரில் நிறுத்திவைத்திருக்கிறோம். நாங்களே அந்தத் தொழில்களையும் செய்து வருகிறோம். நாங்கள் டீ அருந்தும் கடைகளில் எங்களோடு சமமாக உட்கார வைத்து அவர்களையும் டீ அருந்தச் செய்கிறோம். உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கின்ற தெரு வழியாக அவர்கள் பிணத்தையும் தூக்கிச் செல்ல அனுமதி வழங்கியுள்ளோம்.

[1978 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் எல்லோருக்கும் தெரியும். நீங்கள் கேள்வியைச் சுருக்கமாக கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : இந்த முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற கிராமங்களுக்குத் தனியாக ஏதாவது சிறப்புத் திட்டம் வகுக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இதுபோன்று முன்னோடியாக இருக்கிற கிராமங்களுக்கு அரசாங்கம் பரிசு வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்று இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, படிப்பது இராமாயணம், இடிப்பது இராமர் கோயில் என்பதைப்போல சில தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி மேடையிலே பேசிவிட்டுத் தங்கள் வீட்டிலே தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிப்பது கிடையாது. மற்றும் இது சம்பந்தமாக வழக்குகள் காவல் துறையினருக்குச் சென்றால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பது இல்லை, ஏனென்றால் இந்த 'அன்டச்சபிளிட்டி ஆக்ட்'டில் சில சந்து பொந்துகள் இருக்கின்றன. அந்த சந்து பொந்துகளை அடைத்து, நல்ல முறையில் இந்தச் சட்டத்தைத் தீவிரப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தைக் கொஞ்சம் கடுமையாக்கித்தான் இப்போது அரசாங்கம் பின்பற்றி வருகிறது. ஊருக்கு உபதேசம் செய்கிறவர்கள் தங்களுக்கும் அது பொருந்தும் என்பதுதான் இந்த நாட்டின் வழக்கம். ஏதாவது குறைபாடு இருந்தால் காலப் போக்கில் நிவர்த்தி செய்யப்படும்.

திரு. பெ, சு. திருவேங்கடம் ; தலைவரவர்களே, இந்த தீண்டாமை ஒழிப்புச் சிறப்புக் காவல்படை 6 மாவட்டங்களில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த 6 மாவட்டங்களிலும் இது வரையில் எத்தனை வழக்குகள் போடப்பட்டுள்ளன? மற்ற மாவட்டங்களிலும் இந்தச் சிறப்புக் காவல்படையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; தலைவரவர்களே, 1976–77 ஆம் ஆண்டில் 2,630 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் 988 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. இந்தச் சிறப்புக் காவல் படையை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். வின்சென்ட் : தலைவரவர்களே, தீண்டாமையால் தான் கல்லாமை, அறியாமை, இல்லாமை எல்லாம் எழுகின்றன. ஆகையால் இந்த ஆமைகளை ஒழிக்க இந்தக் காவல் படை ஆமை வேகத்தில் இயங்காமல் முயல் வேகத்தில் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

1978 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ஆமைகளை ஒழிப்பதற்காகத்தான் அரசாங்கம் புதிய சட்டங்களைக் கொண்டுவந்து, தீவிரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்னல் பேரறிஞர் அண்ணு அவர்கள் இந்தத் தீண்டாமையை ஒழிக்க ஒரு சுவரொட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிட்டார்கள். தாழ்த்தப்பட்ட சகோதரர் ஒருவரை ''கிட்டே வராதே, எட்டி நில்'' என்று உயர் ஜாதிக்காரர் ஒருவர் சொல்வதைப் போல ஒரு பக்கத்தில் போட்டு, இன்னொரு பக்கத்தில் 'இப்படிச் சொன்னல் இப்படிக் கிடைக்கும்' என்று அவரைச் சிறைக்குள்ளே போட்டிருப்பதைப் போல சுவரொட்டியில் போட்டிருந்தார்கள். அந்த சுவரொட்டியை அன்றைய அரசு தடை செய்து விட்டது. தீண்டாமை ஒழிப்பில் அதிக அக்கறை காட்டுகின்ற இன்றைய அரசு, பேரறிஞர் அண்ணு வழியில் நடப்பதாகச் சொல்லப்படும் இந்த அரசு அத்தகைய சுவரொட்டிகளையும் வெளியிடுவதோடு, பேரறிஞர் அண்ணு அவர்கள் வெளியிட்ட அந்த சுவரொட்டியை மீண்டும் வெளியிட இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ஆண்டு அந்த சுவரொட்டி வெளியிடப்பட்டிருக்கிறது.

சோழன் போக்குவரத்துக் கழகம்.

*வினு. 840 திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தை எம்ப்ளாயர்ஸ் அசோசியேஷனில் அண்மையில் இணைத்ததை அரசு அறியுமா?

(ஆ) தனியார் கைக்கொள்ளும் இந்த முறையை அரசு கைவிட முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) இந்த முறையைக் கைவிடத் தேவையில்லை என அரசு கருதுகிறது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, எம்ப்ளாயர்ஸ் வைத்திருப்பது எம்பிளாயர்ஸ் அசோசியேஷன். அதிலே போய் நம்முடைய அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இருக்கிற சோழன் ரோட்வேய்ஸ் கார்ப்பரேஷனை இணைத்து, தொழிலாளர்களுக்கு எதிராக வழக்காட வழக்கறிஞர்களை அமர்த்துவதை அரசாங்கம் ஊக்குவிக்கலாமா? அது சரியல்ல என்று கருதி, அந்த எம்பிளாயர்ஸ் அசோசியேஷனில் இருந்து வாபஸ் பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?